2020 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

மாணவர் விடுதி

***25078—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், நெற்குப்பை ஊராட்சி, அம்பலவாணனேந்தல், மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். "எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், இந்த ஆட்சியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மக்களுக்காகவே அயராது பணியாற்றும்" என்ற வாக்கினை நிரூபித்துக் காட்டி, குறிப்பாக சிறுபான்மையினர் நலனில் மிகுந்த அக்கறை காட்டி, மத்திய அரசின் பல்வேறு விருதுகளைப் பெற்று, மூன்றாண்டுக் காலம் சிறப்பான ஆட்சியை நடத்தி, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், நெற்குப்பை ஊராட்சி, அம்பலவாணனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் ஆண்டை நிறைவு செய்து, முத்திரை பதித்ததோடு மட்டுமல்லாது, தொடர்ந்து மூன்றாம் முறையும் St. George கோட்டையினுடைய சிம்மாசனத்தில் அம்மாவின் ஆட்சியை அமர்த்திக் காட்டவிருக்கின்ற தமிழ்நாட்டின் கெஜ்ரிவால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய விடிவெள்ளியாம் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத் தோளோடு தோளாக துணை நிற்கின்ற தேனி மலைத் தென்றல், அரசியலில் அடக்க முடியாத காளைகளையும் அடக்கிக் காட்டுகின்ற ஆற்றல் மிகுந்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர், அண்ணன் திரு. O.P.S. அவர்களையும் வாழ்த்தி, வணங்குகிறேன்.

நான் தெரிவித்திருக்கிற பள்ளி சாதாரண பள்ளி அல்ல; இந்தச் சாமானியனை சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த பள்ளி என்பதை மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது கல்விக் கண்ணைத் திறந்து வைத்த அந்தக் கல்விக் கூடத்தில் ஒரு மாணவர் விடுதியைத் திறந்து வைக்க வேண்டுமென்ற எனது விருப்பத்தை மறுபரிசீலனை செய்து நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் 1,348 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1,099 விடுதிகள் பள்ளி மாணவர்களுக்கான விடுதிகளாகச் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் மொத்தமுள்ள 74

2020 பிப்ரவரி 19]

விடுதிகளில், 46 விடுதிகள், பள்ளி மாணவர்களுக்கான விடுதிகளாக இயங்கி வருகின்றன. அந்த விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட பள்ளி மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 3,640 ஆகும். அவற்றில், பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 2,570 ஆகும். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 13 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 9 பள்ளி மாணவர் விடுதிகளாகவும், 4 பள்ளி மாணவியர் விடுதிகளாகவும் இயங்கி வருகின்றன. மேலும், அறந்தாங்கி தொகுதியில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதிகள் இரண்டும் இயங்கி வருகின்றன. குறிப்பாக, அம்பலவாணனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினைச் சார்ந்த 100 மாணவர்கள் கல்வி பயின்று வருவதால், அம்பலவாணனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மற்றொரு கோரிக்கை ஒன்றையும் வைக்க விரும்புகிறேன். மறைந்தும், மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பொன்மனத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எனது தொகுதி, ஆவுடையார்கோவிலுக்கு அருகில் கலைக் கல்லூரி ஒன்றை தனது பொற்கரங்களால் திறந்து வைத்தார்கள். அவரைப்போன்றே அந்தக் கலைக் கல்லூரியும் மிகக் கம்பீரமாக எழுந்துநின்று கல்விச் சேவை செய்து வருகிறது. அந்தக் கல்லூரியில் ஆண்டுக்காண்டு மாணவர்களுடைய சேர்க்கை விகிதமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. சுற்றுச் சுவர் அமைத்தல், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் இன்னமும் அங்கே பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதால், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு கோரிக்கையும் வைத்துள்ளேன். அந்தக் கலைக் கல்லூரியிலாவது மாணவர் விடுதி ஒன்றை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2020 பிப்ரவரி 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தேவையினைக் கருத்திற்கொண்டும், நிதிநிலைக்கேற்பவும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைப்பதற்காக, அரசாணை எண் 165, நாள் 13–4–2015 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதற்கான நில மாற்றம் செய்வதற்கும் வருவாய்த் துறை ஒப்புதல் அளித்துள்ளது. நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மற்றும் மாணவர் விடுதியை அங்கு அமைப்பதற்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் அவர்களுக்கும் தொடர்ந்து கடிதமும் நான் எழுதியிருக்கிறேன்.

தற்போது நடைபெறவிருக்கக்கூடிய 2020–2021 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போதாவது, பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மற்றும் மாணவர் விடுதி அமைப்பதற்கு அரசாணை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழக்கூடிய, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அதிகளவில் வசித்து வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், மாதவரம், பெரம்பூர், வில்லிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு சட்டமன்றத் தொகுதிகள் அதைச்சுற்றி அமைந்திருக்கின்றன. எனவே, Backward Class நல கல்லூரி மற்றும் மாணவர் விடுதி அமைவதால், நிச்சயமாக

2020 பிப்ரவரி 19]

அதிகளவில் மாணவர்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, இதை உடனடியாக விரைவுபடுத்தி, இந்தாண்டே இந்தப் பணியைத் துவக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 11–35

3. தகவல் கோரல்

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட டெல்டா பகுதிகளில் புதிய மற்றும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதி மறுத்திடும் வகையில் தீர்மானம் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 9 ஆம் தேதி தெரிவித்திருக்கிறார்கள். அவர் அப்படி தெரிவித்த நேரத்தில், புதிய ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதி*